# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

******

**முறையீட்டு மனு எண். 21/நகராட்சி/2019**

**நாள் : 29/03/2019**

**திருமதி T. முத்துலட்சுமி,**
**திருமதி S. ராமலட்சுமி,** – **முறையீட்டு மனுதாரர்கள்**
**விருதுநகர்.**

**நகராட்சி ஆணையர்,**
**விருது நகர் நகராட்சி,**
**விருது நகர் மாவட்டம்.** – **எதிர் மனுதாரர்**

விருது நகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட காந்தி நகர், எண்.1/935–28, மல்லாங்கிணறு சாலை முகவரியில் வசிக்கும் திருமதி T. முத்துலட்சுமி மற்றும் திருமதி S. ராமலட்சுமி ஆகியோரின் 08.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 21/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் மனுதாரர்களில் ஒருவரான திருமதி T. முத்துலட்சுமி விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருது நகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட காந்தி நகர், எண்.1/935–28, மல்லாங்கிணறு சாலை முகவரியில் வசிக்கும் திருமதி T. முத்துலட்சுமி மற்றும் திருமதி S. ராமலட்சுமி ஆகிய இருவரும் தங்களது தந்தை திரு R. சுப்ரமணியன், விருது நகர் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றி 28.02.1994–இல் பணி ஒய்வு பெற்றதாகவும், எனினும் பணி ஒய்வுக்குப் பின் அவருக்கு வழங்கப்படவேண்டிய ஈட்டிய விடுப்பு ஊதியம், தொகுப்புத் தொகை மற்றும் பிற நிலுவை இனங்கள் ஆக மொத்தம் ரூ. 1,71,897/– வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்து முறையீடு செய்துள்ளனர். மேற்குறிப்பிட்ட நகராட்சிப் பணியாளர் திரு R. சுப்ரமணியன் 31.03.2018–இல் காலமாகிவிட்டதால் அவருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையினை அவரது வாரிசுதாரர்களான தங்களுக்கு வழங்க ஆணையிடக்கோரியும் முறையீட்டு மனுதாரர்கள் வேண்டியுள்ளனர்.

2. முறையீட்டு மனுதாரர்களில் ஒருவரான திருமதி T. முத்துலட்சுமி அவர்களிடம் 12.03.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது தனது முறையீட்டு மனுவில் தெரிவித்த விவரங்களை உறுதி செய்தார்.

3. முறையீட்டு மனுதாரர்களின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். 28.02.1994–இல் ஓய்வு பெற்ற முறையீட்டு மனுதாரர்களின் தந்தையார் திரு R. சுப்ரமணியன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதித் தொகை நிலுவையில் இல்லை என்றும், ஈட்டிய விடுப்பு வகையில் 232 நாட்களுக்குரிய ஊதியம் ரூ.26,360/– வவுச்சர் எண்.2730/3/95–ன் படி வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளருக்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் செயல் முறை ஆணை எண்.நி.மு.தி. 2 (2)/97769/94 நாள் 18.01.1995–இன் படி ஓய்வூதியம், இறப்பு மற்றும் ஓய்வு காலப் பணிக்கொடை மற்றும் தொகுப்புத் தொகை வழங்கப்பட்டு பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பக்க நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர்களின் தந்தையார் திரு R. சுப்ரமணியன் ஓய்வு பெற்று சுமார் 24 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அவருக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்பட்ட விவரத்தினையும் நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார். இது சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர்களுக்கும் உரிய பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019**–ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள், **29**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திருமதி T. முத்துலட்சுமி,**
   **எண்.1/935–28,**
   **மல்லாங்கிணறு சாலை,**
   **காந்தி நகர்,**
   **விருது நகர்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **விருது நகர் நகராட்சி,**
   **விருது நகர்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**